வழங்கப்பட்ட வீடுகளில் உரிமை பெற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டை alteration முறையிலே, ஒரு மாடி கட்டியிருக்கின்ற அந்த வீட்டின் மேலே இன்னும் இரண்டு, மூன்று மாடிகள் கட்டுவதைப்போல, பல்வேறு மாற்றங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை அரசு அனுமதித்துள்ளதா அல்லது விதியை மீறிச் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊரில், எந்தக் கட்டடத்தில் அப்படி கட்டப்பட்டிருக்கிறதென்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், விற்பனை செய்யப்பட்டிருந்தால் அந்த வீட்டை அவர்கள் கட்டிக்கொள்ளலாம். அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றால், முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், வாடகைக்குக் குடியிருப்பவர்கள் நிச்சயமாக அப்படிச் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

முதியோர் இல்லங்கள்

***733—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதரவற்ற முதியோர்களைப் பராமரிக்க வட்டாரந்தோறும் முதியோர் இல்லங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2012 மே 10]

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளதைச் செயல்படுத்தும் ஒரு முன்னோடி முயற்சியாக, தமிழகத்தின் 32 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 2 வட்டாரங்கள் வீதம் 64 வட்டாரங்களில் முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களால் கொள்கை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே பிள்ளைகளால் கைவிடப்பட்ட ஆதரவற்ற முதியோர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும் என்பது எங்களுடைய தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய கொள்கையாகவும் இருக்கிறது. ** அந்த அடிப்படையிலும் இன்றைக்கு முதியோர்களைப் பராமரிக்க மாவட்டங்களிலுள்ள வட்டாரந்தோறும் முதியோர் இல்லங்களை அமைத்து, அந்த முதியோர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பு வழங்க . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்திபன், மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அரசு தந்த உதவியைக் குறிப்பிட்டுச் சொல்லி அதன் அடிப்படையில் துணைக் கேள்வி கேட்கலாம். ஆனால், ** அவைக்கு வெளியே. அதை அவைக்குள் பேசக்கூடாது. அதனால் அது அவைக் குறிப்பில் இருக்காது. நீங்கள் துணைக் கேள்வி கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மே 10

முற்பகல் 10-55

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *ஆதரவற்ற முதியோர்களைப் பராமரிக்க வட்டாரந்தோறும் முதியோர் இல்லங்கள் அரசால் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விளக்கமாகச் சொன்னேன். 32 மாவட்டங்களில் 64 வட்டாரங்களில் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடினேன்" என்கிற வள்ளலாரின் பாட்டுக்கு உரிய வகையில், முதியோர்கள் வாடிவிடக் கூடாது என்பதற்காகவே ஒரு சீரிய எண்ணத்தை மனதிலே வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "நான் இருக்கிறேன்" என்று கூறி இந்த முதியோர் இல்லங்களை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, ** *ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு அரசின் திட்டமாக, ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறபோதுதான் அது மக்களிடத்திலே போய்ச் சேரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், அதை அவைக் குறிப்பிலிருந்து நான்*

*******மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2012 மே 10]

எடுத்துவிட்டேன். (குறுக்கீடு) அதையொட்டிய பதில்தான் அவைக் குறிப்பில் இருக்கும். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்ததனால் அந்தக் கருத்து வராது.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இந்த அவையிலே பெரிய விஷயமாகச் சொல்ல வேண்டுமென்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அதை நான் நீக்கிவிட்டேன். அது சம்பந்தமாக பதில் தேவையில்லை.

வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

248—

அரசு கலைக் கல்லூரி

*__224__—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், ஒரு புதிய கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், கிராமப் பகுதியாக

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS